என்று செவிலி வினவுகிறாள். அவளுக்கு விடையாக அக்காதலன், "எதிரே ஒரு காளையைக் கண்டேன்; மற்றவரைக் குறித்து இப்பெண்ணோடு பேசுங்கள்" என்று அவன் நின்ற காதலியைக் காட்டுகிறான்.

**துணைபொருந்த கோவையும் போலெழில்**
**பேதையும் தோன்றநுமுன்**
**இணைபொருந்த கொல்லைபோ**
**டேதுந்த காதலொடேகினரே.**
**அனையுந்தர் ஏறொத்த காளையைக்**
**கண்டேன், மற்றவரோ**
**பிணைபொருந்த நோக்குடைப்**
**பெண்ணிவள்**
**தன்னோடும் பேசியிலே**

**(திருவேம்ப-பா.எண்-73)**

என்ற இந்த கருத்து திருக்கோவையாரிலும் வருகின்றது. அந்த தலைவன் தன் காதலியை நோக்கி "அன்னை சொல்லியது யாது? சொல்வாயாக" என்கிறான்.

**மின்டார் என உவந்தேன் கன்டு**
**நுடமை இம் மேதாவே**
**பூண்டார் இருவர்முன் போயினரே-**
**புலி நூர்னை நின்று**
**ஆண்டான் கருவரை ஆளியன்**
**னானைக்கன் டேன், அயலே**
**தூண்டா விளக்கனை யாய், என்னை**
**யோஅன்னை சொல்லியதே**

**(திருக்கோவை-244)**

என்ற இக்கோவை பாடலுக்கும் பட்டினத்தார் பாடலுக்கும் உள்ள ஒற்றுமை நன்கு கலைந்து இன்புறுக்கக்கது. முக்தியில் சிவபெருமான் ஒருவரே ஆணாக விளங்குவார். மற்றைய முக்தி இன்பம் துய்க்கும் ஆன்மாக்கள் எல்லாம் பெண்ணாகவே பாவிக்கப்படுவர். பட்டினத்தடிகள் தோழிக்கூற்றாக, செவிலிக் கூற்றாக ஏகம்பநாதரின் வடிவழகையும், கச்சியில் கோயில் கொண்டு அருள் பாலிப்பவரையும் அகத்திணை மாந்தர்கள் மூலம் வெளிப்படுத்துகிறார். உயிர்களின் உண்மை தன்மை இறைவனின் அருளால் தான் பிறக்கிறது என்ற கருத்தை முன்னிறுத்தியே அவரது அக மரபு சிந்தனை வெளிப்படுகிறது. உயிரின் உள்ளார்ந்த உணர்வு, ஆன்மா பரமன் உறவின் நெருக்கத்தை கட்டுவை காதலும் காதலியையும் இணைக்கும் பல உணர்வு, ஆன்மாவையும் இறைவனையும் இணைக்கும் உணர்ச்சியாக மாறுகிறது. அகப்பாடல்களில் பிரிவு என்ற துன்பம் காணப்பட்டது. அது துன்பம், மாயை என்றும் பிரபஞ்ச பிரிவின் துன்பம் வெளிப்பாடு எனலாம். இறைவன் தன்னை அன்பின் வடிவமாகவே வெளிப்படுத்திக் கொள்கிறான். அதனால் பக்தர் காட்டும் அன்பு, தெய்வீக அன்போடு கலக்கிறது. நாயன்மார்களின் பாடல்களில் பக்தி எங்கும் அன்போடு கலந்துள்ளது. அன்பில்லாத வழிபாடு பயனற்றது என்று நாயன்மார்களின் வாழ்க்கை உணர்த்துகின்றது.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தேர் வரவு என்பது தலைவன் வெற்றிகரமாகப் போர் புரிந்து, தலைவியின் இருப்பிடம் நோக்கி தேர் வருவதை சித்தரிக்கும் மெய்ப்பாடுகளுள் ஒன்று. அப்போது தோழி, தலைவியின் மனநிலையை சொல்லும் விதமாக உரையாடல் நிகழ்த்துவாள். பிற்கால சமய இலக்கியங்களிலும் தோழிக் கூற்று நிகழ்த்தும் முறை தொடர்ந்து உள்ளது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திருவேங்கமுடைய திருவந்தாதியில்

**வரங்கொண்டு இமையோர்**
**நலங்கொள்ளும்**
**..... அன்பர்தம் தேரில் முன்னே**
**தரங்கொண்டு பூக்கொண்டு**
**கொன்றைபொன் னாகத்தன் காந்தட்**
**கொத்தின்**
**கரங்கொண்டு பொற்கண்ணம் ஏந்தவும்**
**போந்தன கார்முகிலே**

**(திருவேகம்.பா88)**

என்று ஏகம்பரின் தேர் வரவைக் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்தில் தோழி, தலைவிக்கு தலைவன் வந்த செய்தியை சொல்லி ஆறுதல் அளிப்பாள். பட்டினத்தார்





பாடலில், பக்தர் எனும் தோழி இறைவனின் தேர் வரவை அறிவித்து ஆன்மா எனும் தலைவி மகிழ்வடையுமாறு கட்டமைத்துள்ளார். இதனால் உலகியலான அக மெய்ப்பாடு சமய மெய்ப்பாடாக மாற்றமடைவதைக் காணலாம்.

## முடிவுரை

பட்டினத்தார் பாடல்களில் அக மரபு தனித்துவமான வடிவமாக விளங்குகிறது. சங்க இலக்கியத்தில் காணப்பட்ட காதல் உணர்வுகள், பக்தி இலக்கியத்தில் பரிணாமம் பெற்று இறைவனை நோக்கிய ஆன்மாவின் தேடல் விருப்பமாக மாறின என்பது அறியலாம். அக இலக்கியம் தத்துவ, சமய பக்தி கோணங்களில் பரிணமப்படுத்தும் சிறப்பு படைப்பாக பட்டினத்தார் பாடல்களை கருதலாம். தேர் வரவு, தோழிக் கூற்று மெய்ப்பாடுகள், சங்க அகப்பாடல் மரபின் தொடர்ச்சியாகும். ஆனால் அது வெறும் காதல் நிகழ்வாக இல்லாமல், சிவபெருமானின் அருள் வரவு, பக்தரின் ஆறுதல், ஆன்மாவின் பரமானந்தம் என்று சமய உணர்வுடன் விளக்கப்படுகிறது. இதன் மூலம் பட்டினத்தார் பாடல்கள் அகம், சமயம், தத்துவம் எனும் மூன்று அடுக்குகளையும் இணைக்கும் தனித்துவம் பெறுகின்றன.

## துணை நூல் பட்டியல்

1. பதினொன்றாம் திருமுறை, இந்து சமய அறநிலையத்துறை பதிப்பகம், சென்னை.
2. சைவ இலக்கிய வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
3. பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், கா.சுப்பிரமணிய பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக பதிப்பகம், திருவையாறு.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம், சென்னை.

# பட்டினத்தாரின் அக மரபு வழி இறைக்காதல்

*ச.வித்யாகுமாரி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

*முனைவர் ச.பிரியா*
நெறியாளர், உதவிப்பேராசிரியர்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை

மலர்: 13
சிறப்பிதழ்: 2
மாதம்: ஆகஸ்ட்
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.5281/zenodo.17078441

***ஆய்வு முன்னுரை***
*அன்பும் அருளும் அறனும் பெற்று மனிதன் மேன்மை அடையும் நெறிகளை வாழ்ந்து காட்டியவர்கள் சமயக் குரவர்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்மை நெறி நின்று வாழ்ந்து காட்டி பிறரையும் உயர்வு பெறுமாறு செய்தவர்கள். அந்த வகையில் பன்னிரு திருமுறைகளுள் பதினொன்றாம் திருமுறையுள் ஐந்து நூல்களைப் படைத்த பட்டினத்தார் அன்பு நெறியில் நின்று இறைவனுடன் இரண்டறக் கலந்தவர். தொல்காப்பியர் சுட்டும் அன்பு நெறியாகிய தலைவன்-தலைவி நெறியில் நின்று திருஏகம்பமுடையார் திருவந்தாதி என்ற நூலில் இறைமேன்மையை அருளிச் செய்தார். அன்பும் காதலும் வேறு வேறு அல்ல. ஒன்று தன்னை மறப்பது, பிறிதொன்றை மறவாதிருப்பது. இதில் "நான்" என்ற எண்ணம் அழிகிறது. கல்வியால் அறிவும், அறிவால் பக்தியும், பக்தியால் அன்பும், அன்பால் அருளும், அருளால் ஞானமும் வாய்க்கின்றன. முதிர்ந்த அன்பே பேரின்பக் காதலாக, தலைவன்-தலைவி காதலாக மலர்கிறது. பக்தி இலக்கியங்களில் கூறப்படும் இந்த நாயக-நாயகி பாவனையின் மூலம் அத்துவித நெறி வெளிப்படுகிறது எனலாம். அதாவது யான், எனது என்ற தன்முனைப்பற்று "அருள்வழி நிற்றல்" என்று சிவஞானபோதம் சுட்டும் நெறியே பட்டினத்தார் பாடல்களிலும் கூறப்பட்டுள்ளது. அத்தகைய அத்துவித நெறியை பட்டினத்தார் அகமரபு கோட்பாட்டின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*
***திறவுச்சொற்கள்:*** *அகமரபு, பட்டினத்தார், இறை சிந்தனை, அன்பு, தலைவன், தலைவி*

## மரபு

"மரபு" என்பது முந்தைய தலைமுறைகள் சேர்த்து வைத்திருக்கும் அனுபவம், அறிவு, முடிவு ஆகிய அனைத்தும் சேர்ந்தது. காலப்போக்கில் மானுட வர்க்கம் தன் அறிவுத் தோட்டத்தில் அனுபவத்தில் உணர்ந்து தெளிந்து உருவாக்கிய முடிவுகள் அவை. வருங்காலத்திற்கு என்று இலக்கியமாக, சமயமாக, அறநெறியாக பிற அறிவு துறைகளாக முந்தைய தலைமுறை விட்டுச் சென்ற அனுபவத் திரட்டு தான் மரபு. அவை காலந்தோறும் கடைபிடிக்கப்பட்டு வருவன.

## அக மரபு

இலக்கியத்தில் ஒருவர் இயற்பெயர் சுட்டுதல் மரபன்று. இதையே தொல்காப்பியம் "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்" (தொல்.அக.57) என்கிறது. ஆயினும் பக்தி இலக்கியத்தில் இறைவன் மீது காதல் கொண்டு பாடப்படும் பாடல்கள் இறைவனின் பெயரைச் சுட்டியே பாடப்படுகின்றன. பக்தி இலக்கியத்தின் நோக்கம் இறைவனின் சிறப்பைப் பாடுவதால் தலைவனாகிய இறைவன் பெயர் சுட்டப்படுகின்றது.

## அகம்

பொருளிலக்கணத்தின் ஒரு கூறாகக் கூறப்படும் அகம், பழந்தமிழரின் காதல் உணர்வின் நுட்பங்களைத் தன்னகத்தே உடையது. இக்காதல் உணர்வு "அகம்" எனப்படும். ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்தில் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் இன்னதெனக் கூறவியலாத யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாகலின் அதனை அகம் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார்.

## பக்திக்கு அடிப்படை அன்பே

மனித வாழ்வின் உயரிய நோக்கம் கடவுளுடன் இணைந்து வாழ்தல் எனக் கூறப்படுகிறது. அந்த இணைப்பை எளிமையாகக் கொண்டு வரும் வழி பக்தியாகும். பக்தியின் பல வடிவங்கள் இருந்தாலும் அவற்றின் வேரும் அடிப்படையும் அன்பே என்பது உண்மை.

**"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்"** (குறள்-71)

அன்பைக் கட்டுப்படுத்தவோ, மறைக்கவும் எந்தவிதமான தடையோ தாழ்பாளோ கிடையாது. அன்பு உடையவர் துன்பத்தில் இருக்கும் போது அவருடைய கண்களில் இருந்து வெளிப்படும் கண்ணீரே அந்த அன்பை எல்லோரும் அறியும்படி வெளிப்படுகிறது.

"அன்பே சிவம்" என்ற திருமூலரின் வாக்கிற்கேற்ப பக்தியின் அடிப்படை அன்பு என்பதை தெளிவுபடுத்துகிறது. சங்க அகப்பாடல்கள் ஐந்திணை முறையில் அமைந்தன. இந்த உணர்ச்சி முறை திருமுறைகளிலும் பிரதிபலிக்கின்றது. ஆனால் உலகியல் காதல் சமய இலக்கியங்களில் உவமையாக மாறுகிறது. ஆன்மாவை தலைவியாக பாவித்து சிவனை காண இயலாத துயரம் இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு சில பாடல்களில் தலைவி தலைவனை அடைந்த ஆனந்த நிலையை குறிப்பிடுகிறது. இது குறிஞ்சி முல்லை திணைகளுக்கு உள்ள உணர்ச்சி நிலைக்கு நிகரானதாக சொல்லப்படுகிறது. சில பாடல்களில் தலைவன்-தலைவி உறவு, தலைவி-செவிலித்தாய் உறவு, தலைவி-தோழி உறவு போல பாடல்களில் தனிக் கதையுடன் வெளிப்படுத்தப்படுகிறது. பக்தி என்றால் "பணிதல், சேவித்தல், அன்புடன் துதித்தல்" எனப் பொருள் தருகிறது. கடவுளுக்கு அஞ்சி தொழுதல் அல்ல; அன்போடு அணுகி தன்னை அர்ப்பணித்துக் கொள்வதே பக்தி.

## பட்டினத்தாரின் பக்தி நெறி:

திருவேகம்பமுடையார் திருவந்தாதி எனும் இப்பனுவலில் கச்சி ஏகம்பர், ஏகம்பர்- கச்சி என்று ஒரு பகுதி துதி, ஒரு பகுதி அகம் என்று விரவிக் காணப்படுகிறது. மேலும் வினாதல், தலைவனை நாதல், இரவுக்குறி, பகற்குறி, அகப்பொருளின் உடன் போக்கு என்ற துறைக்குரிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு பாடல் குறிப்பிடத்தக்கது. செவிலித்தாய் மகளையும் அவள் காதலனையும் தேடிச் செல்கிறாள். எதிரே இளம் காதலர் இருவர் வருகிறார்கள். "உம்மைப் போன்ற இரு காதலர் சென்றதை எதிரே கண்டீர்களா

10 புறநானூறுகாட்டும் குடும்ப அறம் 34
முனைவர் மு. நடராஜன்

11 பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள் 39
முனைவர் இரா.நி. ஸ்ரீகலா

12 பக்தியில் அறிவியல் சிந்தனைகள் 44
முனைவர் ந. புனிதலெட்சுமி

13 சீவக சிந்தாமணி - ஓர் அறிவியல் பார்வை 49
முனைவர் அ. சுகந்தி

14 அறிவியல் தொழில்நுட்பத்தில் இலக்கியங்களின் பிரதிபலிப்பு 55
முனைவர் ம. இலட்சுமணன்

15 யாமம் நாவலில் நவீனத்துவம் 61
க. சமயேஸ்வரி
முனைவர் ந. விஜயசுந்தரி

16 பட்டினத்தாரின் அக மரபு வழி இறைக்காதல் 66
ச.வித்யாகுமாரி
முனைவர் ச.பிரியா

17 An Economic Study of Sustainable Production of Coconut in Kanniyakumari District 70
**Ilavarasan**
**Dr.Mariammal**

18 சித்தர்கள் காட்டும் மூச்சுப் பயிற்சி 75
முனைவர் தா.ஜெயஷீலா

19 தன்னை உணர்வதே மெய்ஞானம் 82
முனைவர் மு.சாதிக் அலி

20 பட்டினப்பாலையில் பழந்தமிழர்வாழ்வு
முனைவர் செ. தேன்மொழி

21 பழந்தமிழர் இலக்கியங்களில் அறிவியல் செய்திகள்
முனைவர் ம.ஜஸ்டின் பியூலா

22 எஸ். ராமகிருஷ்ணனின் சஞ்சாரம் நாவலில் உளவியல் கூறுகள்
ச. விண்மதி
முனைவர் சி. முடியரசன்

SHANLAX
INTERNATIONAL JOURNAL OF
ARTS, SCIENCE AND HUMANITIES
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Vol. 13 Special Issue 2 August 2025

P-ISSN: 2321-788X E-ISSN: 2582-0397

ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி
தூத்துக்குடி

மற்றும்

சான்லாக்ஸ் சர்வதேச கலை, அறிவியல் மற்றும்
மனிதநேய இதழ்
மதுரை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# அறிவியல் தொழில்நுட்பத்தில் இலக்கியத்தின் பிரதிபலிப்பு

தொகுதி - III

ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி
தூத்துக்குடி

VOL. 13 | SPECIAL ISSUE 2 | AUGUST 2025
P-ISSN: 2321-788X | E-ISSN: 2582-0397

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

## ஹோலி கிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி

பொன்விழாவை முன்னிட்டு தமிழ்த்துறை ஆங்கிலத்துறை

மற்றும்

Shanlax International Journal of Arts, Science and Humanities

(ISSN - Peer Reviewed Journal)

தொகுதி – III

இணைந்து நடத்தும்

# அறிவியல் தொழில்நுட்பத்தில் இலக்கியத்தின் பிரதிபலிப்பு

(Voice of Literature in Science and Technology)

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்

முனைவர் அந்தோணி ஆரோக்கிய அனுபியா மெல்

முனைவர் மி. ஜோஸ்பின் ரேணுகா